DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 13.02.2026

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.30/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.4 |
| Name | : | ரமேஷ் |
| Father Name | : | அன்பழகன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 13.02.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்)**
**<u>விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(12.23.P.M):–</u>**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், நாகலூாரில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகின்றேன். கடந்த 11.06.2024–ம் தேதி மதியம் 02.00 மணிக்கு நான் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது ஏற்காடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தில் திருட்டு வழக்கு சம்மந்தமாக வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள் நானும் எனது நண்பர் கார்த்திக் என்பவரும் சம்பவ இடத்தில் இருந்தோம்.

போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1–வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த 1–வது**

**கையொப்பம் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. போலீசார் எங்கு வைத்து படம் வரைந்து கொண்டிருந்தனர் என்றால் ஏற்காடு – நாகலூார் செல்லும் சாலையில் வைத்து படம் வரைந்து கொண்டிருந்தனர். கையெழுத்து செய்த தாளில் என்ன விவரம் இருந்தது என்று படித்து பார்த்தேனா என்றால் இல்லை, ஆனால் படம் வரைந்து எழுதியிருந்த தாளில் தான் கையெழுத்து செய்தேன். நான் எத்தனை வருடமாக முத்துாட் பைனாஸ்சில் வேலை செய்து வருகின்றேன் என்றால் 14 வருடமாக வேலை செய்து வருகின்றேன். அ.சா.1–ஐ தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1–னிடம் எனது பெற்றோர் வேலை செய்வதால் அ.சா.1– கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் சாட்சியாக உள்ளேன் என்றால் சரியல்ல.

2. மேற்படி கையெழுத்து காவல் நிலையத்தில் வைத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.30.P.M)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.02.13 12:31:23 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.